DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No.132/2025**

Deposition of Witness: PW1.

| | | | |
|---|---|---|---|
| Name | பாஸ்கரன் | Father Name – பொன்னுச்சாமி | |
| Age | 52 | Village – | போ.மீனாட்சிபுரம் |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.07.2026

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1. எனது தந்தை பொன்னுச்சாமி 2 திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். எனது தந்தையின் முதல் மனைவி பெயர் பெரியநாயகம் என்றால் சரிதான். பெரியநாயகம் உடன் ஏற்பட்ட முதல் திருமணத்தை எனது தந்தை முறைப்படி விவாகரத்து செய்யவில்லை என்றால் சரியல்ல, ஊர் பெரியவர்கள் முன்பு வைத்துப் பேசி விவாகரத்து செய்துவிட்டார். அதுசம்பந்தமான ஆவணங்கள் எதுவும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தையின் இறந்த தேதி என்னவென்றால் சரியாயக ஞாபகம் இல்லை. எனது தந்தை இறந்த தேதி 17.02.2009 என்றால் சரிதான்.

2. பெரியநாயகம் இறந்த தேதி 03.04.2015 என்றால் சரிதான். எனது தந்தையின் இறப்பு சான்றிதழை 20.02.2009-ம் தேதி வாங்கி விட்டோம் என்றால் சரிதான். 2009-ம் ஆண்டே இறப்பு சான்றிதழ் வாங்கி விட்டு 2025-ம் ஆண்டு வாரிசு சான்றிதழ் கோர வேண்டிய அவசியம் என்னவென்றால் தற்போது வீட்டின் குழாய் இணைப்பு வாங்குவதற்கு வாரிசு சான்றிதழ் தேவைப்படுகிறது. எனது தந்தை இறந்தபோது பெரியநாயகம் உயிருடன் இருந்தார் என்றும் அப்போது வாரிசு சான்றிதழ் கேட்டு விண்ணப்பம் செய்திருந்தால் பெரியநாயகமும் வாரிசாக வருவார் என்பதால் பெரியநாயகம் இறந்த பின்பு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. நாங்கள் 1ம் பிரதிவாதியிடம் முன்னுக்கு பின் முரணாக சொன்னதால் தான் 1ம் பிரதிவாதி எங்களது மனுவை நிராகரித்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் பெரியநாயகம் வேறு திருமணம் செய்துகொண்டார் என்பதை நிரூபணம் செய்ய எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் கோரியுள்ள பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A

Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.07.28 13:04:14 +0530

District Munsif,
Bodinayakanur.